**ARTICLE 51 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00065**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 153–159
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# குமரி மாவட்ட நாடார்களும் பண்பாட்டு ஒடுக்குமுறையும் (பொன்னீலனின் பிச்சிப் பூ நாவலை முன்வைத்து)

**முனைவர் .ஜென்ஸிஸ் குமார் மி**[1,*]
[1]இணைப் பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா,695034., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர் .ஜென்ஸிஸ் குமார் மி — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்
பிச்சிப் பூ நாவல் குமரி மாவட்ட நாடார்கள் பற்றிய ஒரு சமூக ஆவணமாக விளங்குகிறது. சிறப்பாக குமரி மாவட்ட நாடார்கள் ஆதிக்க, அதிகார வர்க்கத்தினரால் எதிர்கொண்ட பண்பாட்டு ஒடுக்கு முறையையும் அதற்காக அவர்கள் மேற்கொண்ட பண்பாட்டு அடையாளப் போராட்டங்களையும் இக்கட்டுரை கவனத்தில் கொள்கிறது. தமிழகத்திலே சாதிய ஒடுக்கு முறைக்கானச் சிந்தனைகள் பார்ப்பணிய மேலாண்மைக்குப் பிறகே தொடங்குகிறது. பார்ப்பணிய மேலாண்மைக்குப் பிறகு ஆதிக்க சாதியினர் அடித்தள மக்களை ஒடுக்குவோராக விளங்கினாலும் அந்த ஒடுக்குமுறை காவல்துறை, இராணுவம் போன்ற அரசின் அடக்குமுறை இயந்திரங்கள் வருவாய்த்துறை, நீதித்துறை போன்ற நிர்வாக அமைப்புகள் மூலமாக மட்டுமே நிகழவில்லை. பண்பாட்டு ஒடுக்குமுறை வாயிலாகவும் ஆதிக்க சாதியினர் பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித் மக்களிடம் தங்கள் மேலாண்மையை நிலைநாட்டியுள்ளனர் என்பதை நாவலின் தரவுகள் வெளிப்படுத்துகின்றன. பண்பாட்டு ஒடுக்கு முறையானது குமரி மாவட்ட நாடார்களிடம் ஆதிக்க சாதியினரால் பொதுக் குளத்தில் நீர் எடுக்கத் தடை, செருப்பு அணிய அனுமதி மறுத்தல், ஆளுவோரின் பாலியல் வன்முறை, கல்வி கற்கத் தடை, கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுப்பு போன்ற நிலைகளில் வெளிப்பட்டதைக் கட்டுரை முன்வைக்கிறது .அதோடு அதற்கு எதிராக நாடார் சாதியினர் மேற்கொண்ட பண்பாட்டு அடையாளப் போராட்டங்களையும் இக்கட்டுரை பதிவு செய்கிறது .

**Keywords / திறவுச் சொற்கள்:** இனவரைவியல்; இனமையவாதச் சிந்தனை; சாணாக் குடி; சிதிலமடைந்து.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** மி, மு. . கு. (2026). குமரி மாவட்ட நாடார்களும் பண்பாட்டு ஒடுக்குமுறையும் (பொன்னீலனின் பிச்சிப் பூ நாவலை முன்வைத்து). Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

ஒரு குறிப்பிட்ட சமூகத்தினை ஊடுருவிப் பார்க்க இனவரைவியல்* ஆய்வு முக்கியமானது. இன வரைவியல் ஆய்வு தொடர்பாக ஒரு தனிப்பட்ட மக்கள் குழுவினரிடம் இருந்து 34 வகையிலானத் தரவுகளைத் திரட்டுவது அடிப்படையானது என பக்தவத்சல பாரதி பதிவு செய்துள்ளார். இத்தகைய விவரங்களை நல்ல முறையில் சேகரிக்க வெறும் எழுத்துச் சான்றுகளையும் புள்ளி விவரங்களையும் மட்டும் இன வரைவியலாளர்கள் நம்புவதில்லை இத்தகையத் தரவுகள் கொண்டு எழுதப்பட்ட நூல்கள் மூலமும் குறிப்பிட்ட இனத்தவரின் பண்பாட்டை அடையாளம் காண இயலும். இனவிரைவியல்

தொடர்பான நூல்களைப் பொருத்தவரையில் தமிழ்நாட்டில் கிறிஸ்தவ மத போதகர்களும் வெள்ளை அதிகாரிகளுமே அறிமுகம் செய்தனர். ஒரு இலக்கியப் படைப்பு சிறந்து விளங்க வேண்டுமானால் அதற்கு மிகவும் உறுதுணையாக அமைவது படைப்பாளியின் இனவரைவியல் அறிவாகும். ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் வாழும் மனிதர்களை மையமாகக் கொண்டெழுதும் நாவலானது அம்மனிதர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், சமயவாழ்வு மற்றும் வாழ்வியல் அம்சங்களை முழுமையாக பிரதிபலிப்பது அவசியம். அதனால் தான் தொடக்கக் கால நாவலாசிரியர்கள் அவர்களுக்கு நெருக்கமான உறவு வட்டங்களையே படைப்புக்களாகக் கொண்டிருந்தனர். இன்று கள ஆய்வுத் துணையுடன் இனவரைவியல் நாவல்களை எழுதுவதும் உண்டு . இன வரைவியல் நாவல்களைப் படைப்பாசிரியர்கள் சுய அனுபவம் மூலமும் தெரிந்து கொள்வதுண்டு. சுய அனுபவம் என்பது, “நூலாசிரியர் தான் பிறந்து வளர்ந்த சமூகச் சூழலையோ, தான் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகச் சூழலையோ தான் மேற்கொண்டு இருக்கும் தொழில் அடிப்படையில் பெறும் அனுபவங்களையும் மையமாகக் கொண்டு நாவல் எழுதுவதாகும்” ஆ.சிவசுப்பிரமணியன் (2014 :10). தமிழ்நாட்டின் தொடக்கக் கால நாவல்கள் ஆதிக்க சாதியினரின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாகவே அமைந்தன. அதுவே தமிழரின் மேலான பண்பாடு என்ற பண்பாட்டு மேலாதிக்கச் சிந்தனையும் மக்களிடம் மறைமுகமாகத் திணிக்கப்பட்டது. தற்கால தலித் நாவல்கள் இக்குறைபாட்டைப் போக்கியுள்ளன எனலாம். அவை பல்வேறுபட்ட அடித்தள மக்களின் பண்பாட்டை உருக்கமான முறையில் பதிவு செய்து வாசகர்களுக்கு வெளிப்படுத்தி வருகின்றன. இத்தகையப் படைப்புகள் நாவல் என்ற நிலையில் மட்டுமன்றி சமூக ஆய்வுக்கான ஒரு ஆவணமாகவும் விளங்கும் சாத்தியக்கூறும் உண்டு . எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு குறிப்பிட்ட சாதி மற்றும் பகுதியினரின் வாழ்க்கை முறையே தமிழ்நாட்டின் பொதுவான வாழ்க்கை முறை என்று கருதும் இன மையவாதச் சிந்தனையை** ஒழிக்கும். அந்த வகையில் நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நாவலும் தென் மாவட்ட நாடார்களின் பண்பாட்டை தன் சுய அனுபவம் மூலம் எழுத்தாளர் பொன்னிலன் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

## பண்பாட்டு ஒடுக்குமுறை

பண்பாட்டு ஒடுக்கு முறை(Cultural oppression) என்பது ஒரு சமூகத்தில் ஆதிக்கத்தில் இருக்கும் ஒரு குழு மற்றொரு குழுவின் மொழி, கலை, பாரம்பரியம், வாழ்க்கை முறை, தொழில், மத நம்பிக்கைகள் போன்றவற்றை திட்டமிட்டு நசுக்குவதைக் குறிக்கும். இது பெரும்பாலும் ஆதிக்க சாதி, அதிகாரவர்க்கம், அரசியல் முதலான வைகள் மூலம் அரங்கேற்றப்படுகிறது. குமரி மாவட்டத்தில் வாழும் நாடார் சாதியினரும் இது போன்ற பண்பாட்டு ஒடுக்கு முறைகளுக்கு முற்காலங்களில் ஆதிக்க சாதியினரால் ஆளாக்கப்பட்டுள்ளது பிச்சிப் பூ நாவல் பதிவுகளில் வெளிப்பட்டுள்ளது. அதனை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

## செருப்பு அணியத் தடை

இந்திய வரலாற்றில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்கள் செருப்பு அணிவதற்கான உரிமை மறுக்கப்பட்டதும் அதற்கு எதிரான போராட்டங்களும் சாதிய ஒடுக்கு முறையின் மிகக் கொடூரமான பக்கங்கள்

ஆகும். செருப்பு என்பது வெறும் காலணி மட்டுமல்ல, அது மனித நாகரீகத்தின் சமத்துவத்தின் மற்றும் சுயமரியாதையின் அடையாளமாகப் பார்க்கப்பட்டதால் ஆதிக்கச் சாதியினர் அதை தங்கள் அதிகாரத்தைக் காட்டும் ஆயுதமாக பயன்படுத்தினர். ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் சொந்தக் குடியிருப்புகளில் செருப்பு அணிந்திருந்தாலும் ஆதிக்கச் சாதியினர் வாழும் தெருக்களில் அல்லது பொது வீதிகளுக்குள் நுழையும் போது செருப்பைக் கழற்றி கைகளில் அல்லது தலைகளில் சுமந்து சொல்ல வேண்டும் என்பது எழுதப்படாத விதியாக இருந்தது. குமரி மாவட்ட நாடார்களும் இத்தகைய பண்பாட்டு ஒடுக்கு முறைக்கு ஆளானதைப் பொன்னீலன் பதிவு செய்துள்ளார்.

“அய்யா வைகுண்டரிடம் தன் நோயைத் தீர்ப்பதற்காக வந்த சின்ன நீலன் ஆறு ஆண்டுகள் அவரிடம் சீடனாக இருந்து பணியாற்றிய காலத்தில், அவர் கனவில் தன் ஊர் முத்தாரம்மன் தோன்றி,” செல்ல மகனே உன் தாயார் முத்தாரம்மை தான் கூப்பிடுகிறேன். அப்படி என்னைய இடிந்து கூரைக்குள்ள முழங்காலக் கட்டிக்கிட்டு உட்கார வச்சிட்டியே என்று கூறியதால் ஐயாவிடம் அனுமதி பெற்று சிதிலமடைந்து*** கிடக்கும் தன் ஊர் முத்தாரம்மன் கோயிலை புதுப்பித்து வழிபாடு நடத்த அனுமதி பெற்றுச் சென்றார் .அம்மன் கோயிலுக்கு தூய்மை பணிக்காக தண்ணீர் எடுக்கப் பொதுக்குளத்துக்கு சின்ன நீலன் சென்றபோது, “

பாதத்தில் அடியோலை மாட்டாம ராசா நடந்து வர மாட்டாரோ அடியோலைய களத்தி கையில எடுவே”என கருங்குளத்து ஆதிக்க சாதியினர் குரல் எழுப்பினார். அடியோலை என்பது ,” ஒவ்வொரு காலுக்கு அளவுக்கு பனையோலை தடுக்கு போல பின்னி பனை நார்ல வார் போட்டு ஆளுக பயன்படுத்தக்கூடிய செருப்பு. வசதிக்குத் தக்க சாதா ஓலையையோ குருத்தோலையோ நீள வாக்குல வார்ந்து சாயத்த தண்ணில அவிச்சு சாய ஓலையா பயன்படுத்தவும் செய்வாக .சாய ஓலைக்குக் கீழ வெள்ளை ஓலைகளைக் கொடுத்து பொத்தி பொத்தி வசதி உள்ளவங்க அடியோலை மெத்த போல கனமா அமைச்சிடுவாங்க. மேல் வாறுக்குப் பதிலா பன நார அருமையா வார்ந்து முடிச்சு போட்டு பயன்படுத்துவாங்க. நடக்குதுக்குப் பஞ்சு போல இருக்கும்”(பொன்னிலன் : 2019:06).

தமிழ்நாட்டின் சில கிராமங்களில் இந்த ஒடுக்குமுறை மறைமுக வடிவில் இன்றும் நீடித்து வருவதைக் காண முடிகிறது. இது காலணிக்கானச் சண்டை அல்ல, ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமை மற்றும் சமத்துவத்திற்கான நீண்ட நெடிய வரலாற்றுப் போராட்டம் எனலாம் .

## பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்க அனுமதி மறுப்பு

தீண்டாமை என்ற பெயரால் அடித்தட்டு சாதியினர் பொது குளத்தில் தண்ணீர் எடுப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டதும் அதற்கு எதிரானப் போராட்டங்களும் தமிழக இந்திய வரலாற்றில் முக்கியமான பக்கங்கள் ஆகும். பொது நீர் நிலைகள் ஆயினும் ஆதிக்க சாதியினர் அதனை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அதில் தண்ணீர் எடுக்கவோ அல்லது அதன் ஒரு பகுதியில் (தங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடம்) நீர் எடுக்கவோ அனுமதி மறுத்துள்ளமையைக் காண முடிகிறது.”குளம் பொதுக் குளம் தான் என்ன சிக்கல்னா அங்கேயும் தீண்டாமை பேய் காவலுக்கு நிக்குது மேற்குப் பக்கம் உயர் சாதிகள் குளிக்க துவைக்க செய்யக்கூடிய வசதியான நீள படித்துறை.

ஒதுக்கப்பட்ட சாதிகள் குளிக்கவும் மத்தபடி ஆடு, மாடு குளிப்பாட்டவும் கிழக்குப் பக்கம் குளம் திறந்து கிடந்தது. அந்தப் பக்கம் அடர்த்தியான சம்பு வளர்ந்து கிடந்தது. அதுக்குள்ளோடி ஆளுக போய் வந்து அமைஞ்சதுதான் பாதை. சாமித்தோப்பு ஐயா தனக்கு கட்டி விட்ட தலைப்பாகையோட சின்ன நீலன் மேற்குப் பக்கம் படித்துறைக்கு வந்தாரு.

அது எவம்ல தலைப்பாகையோட குளத்துக்குள்ள எறங்குறது. தடிச்ச கடுவாக் குரல் ஒன்னு சின்ன நீலனை அதடிச்சி

அம்மனைக் குளிப்பாட்ட ஒரு குடம் தண்ணிக்கு வந்தேன் .

சாணாக் குடி**** அம்மனக் கழுவ தண்ணிக்கு இந்த உயர் சாதிப் பக்கம் தான் கிடைத்ததா? சம்பு வளர்ந்து கிடக்கே அந்த அழுக்கு பிடிச்ச கிழக்கு பக்கம் போடா. அந்த தடித்த குரல் அவருக்கு வழிகாட்டுச்சு. சுத்தமான தண்ணி வேணும்யா என்றார் சின்ன நீலன். சாணாக் குடி அம்மன் அழுக்குத் தண்ணியில குளிச்சிக்கிட மாட்டாளோ ?என்று தடித்த வார்த்தை சொன்னவரு ஏசிக்கிட்டே சின்ன நீலனை இடுப்புல சமுட்டித் தண்ணில தள்ளுனாறு"(பொன்னீலன்,2019:33).

## வேலையில் சமத்துவமின்மை

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பிருந்த காலம் தொட்டு அடித்தட்டு மற்றும் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு அரசு வேலை மற்றும் நிர்வாக அதிகாரங்கள் திட்டமிட்டு மறுக்கப்பட்டதற்கு ஒரு நீண்ட வலி மிகுந்த சமூக சாதிய அரசியல் பின்னணி உள்ளது. கல்வி கற்ற சில ஒடுக்கப்பட்ட அடித்தட்டு பட்டதாரிகள் விண்ணப்பித்த போதும் தீண்டாமை மற்றும் தீட்டு போன்ற காரணங்களைக் காட்டி அவர்கள் அரசு அலுவலகங்களுக்குள் நுழைய அன்றைய உயர் சாதி அதிகாரிகள் முட்டுக்கட்டைப் போட்டனர் . இது குமரி மாவட்ட நாடார் மக்களுக்கும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தால் நேர்ந்துள்ளதை பொன்னீலன் பதிவு செய்துள்ளார். " திருவிதாங்கூர் இராஜ்யத்தில் இருந்து முத முத பி ஏ படித்தவங்க ரெண்டு பேர் ஒருத்தர் நாயரு இன்னொருத்தர் ஈழவர். நாயர் சாதியைச் சேர்ந்தவரை அன்னைக்குள்ள மகாராஜா கௌரவத்தோட மேளதாளத்துடன் ஆனையில் ஏற்றி அரண்மனைக்கு வரவழைச்சி மகாராஜாவே வரவேற்று உடனடியாக தாசில்தார் வேலை கொடுத்தார் (பொன்னீலன்,2019:12). அன்றைய சமூகச் சூழலில் ஒருவர் எட்டாவது வகுப்பு படிச்சு முடிச்சு தேறிட்டா போதும் வெள்ளைக்காரன் ஆளுற எந்த இராஜ்யத்திற்குப் போனாலும் அவனுக்கு வேலை கிடைக்கும். நம் நாட்டுல கூட தேயிலைத் தோட்டம், காப்பி தோட்டம் எல்லாவற்றிலும் வேலை பார்க்க இந்த சர்டிபிகேட் போதும். ஆனால் இதற்கு நேர் மாறாக அன்றைக்கு திருவனந்தபுரத்தில் ஒரு விபரீதம் நடந்தது நாயர் பையனுக்கு கிடைத்த மரியாதையும் வேலை வாய்ப்பும் ஈழவ பையனுக்குக் கிடைக்கவில்லை. இதனை ஆசிரியர்,"ஈழவப் பையனுக்கு வரவேற்பும் இல்லை. வேலையும் இல்லை. அவர் மன்னனுக்கு விண்ணப்பமும் கடிதமும் அனுப்பியும் வேலை கிடைக்கல. திவான் இவரை அழைத்து உன்னுடைய சாதிக்குத் தக்கவுள்ள சோலி மரம் ஏறுத சோலிதான். நீ தென்னை மரம் ஏறி பிழைச்சிக்கோ. நீ ஈழவன் என்பதால் சர்க்கார் வேலை கிடைக்காது. ஏன்னா சர்க்கார் வேலையில் இருப்பவன் சர்க்கார் ஆபீஸ், கோயில் எல்லாவற்றுக்கும் போக,வர வேண்டி வரும். அது உயர் சாதியினருக்கும் கிறிஸ்தவராக மதம் மாறியவருக்கு மட்டுமே உரிமை உள்ளது. அப்படி

உனக்கு அரசாங்க வேலை விருப்பம் இருந்தா நீ கிறிஸ்தவனா மாறிக்க என்றார் (மேலது 2019 :12, 13). என பதிவு செய்துள்ளார். மேற்சுட்டப் பெற்றுள்ள உரிமை மறுப்பு சார்ந்த வரலாற்றுச் செய்தி தாய் மதத்தைப் பின்பற்றியவனுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டதும் அவனே கிறிஸ்தவத்துக்கு மாறினால் அவ்வுரிமை கிடைக்க பெறுவதையும் எடுத்துச் சொல்கிறது.

## ஆளுவோரின் பாலியல் வன்முறை

ஆளுவோரின் அதிகாரத்தைச் செலுத்தும் தளங்களில் ஒன்றாக பெண்ணின் உடல் நிலவுடைமைச் சமூகத்தில் விளங்கியது. ஐரோப்பாவில் குடியானவப் பெண்களின் திருமணத்தில் முதலிரவு உரிமை நிலப் பிரப்புக்களுக்கு இருந்தது. அதுபோல கேரளத்தில் நம்பூதிரிகள் இவ்வுரிமையைக் கொண்டு இருந்ததாக வரலாற்றுப் பதிவுகள் உள்ளன.தமிழ்நாட்டில் இது சிறை எடுத்தல் என்னும் நிகழ்வின் வழி பெண்கள் மீது அதிகாரத்தைச் செலுத்தும் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக

> “ புல்லு அறுத்தா மாட்டுத் தொட்டிக்கு பொண்ணு சமஞ்சா அரண்மனைக்கு “- என்ற பழமொழியைக் குறிப்பிடலாம்.

குமரி மாவட்டத்திலும் இதுபோன்ற பாலியல் வன்முறை நிகழ்ந்துள்ளதைப் பொன்னீலன் பதிவு செய்துள்ளார் .“ ஒருமுறை மூர்த்தியாரு தன் மாட்டு வண்டி பயணத்தின் போது குறும்பூர்ல தாவளம் இட்டாரு. மாடுகளுக்கு வைக்கோல் போட்டுவிட்டு அருகில் இருந்த ஆலமரத்துக்கு அடியில் கிடந்த கருங்கல்லில் நீட்டிநிமிர்ந்து படுத்தாரு. அப்போது அருகில் கிடந்த கருங்கல்லில் இன்னொருத்தர் கிடந்தார். அவர் விம்மி விம்மி அழுகிற சத்தம் கேட்டு மூர்த்தியார் திடுக்கிட்டு எழுந்திரிச்சாறு. அவரிடம் காரணத்தைக் கேட்டார். அவர் வெள்ளையும் சொள்ளையுமாக மாப்பிள்ளைக் கோலத்தில் இருந்தார். அவர் ஐயா எனக்கு இன்றைக்கு காலையில் தான் கல்யாணம் ஆச்சு. எங்க ஊர் வழக்கப்படி என் பெஞ்சாதியோட இன்னைக்கு மொத மொத படுக்குறதுக்கு எங்க ஊர் தலைவருக்குத்தான் உரிமை . அவர் இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துருவாரு அதான் மனசு தாங்காம அழுகிறேன் என்றார் ( 2019: 59).

ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியை ஆட்சி புரிவோர் தம் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அசையும் பொருட்கள் அசையா பொருட்கள் அனைத்தின் மீதும் அதிகாரம் செலுத்தும் உரிமை உடையவராக இருந்தனர். இதற்கு மனிதர்களும் விதிவிலக்கு அல்ல என்பதை இச்சான்று உறுதி செய்கிறது.

## கோயில் நுழைவு அனுமதி மறுப்பு

கோயில் நுழைவு அனுமதி மறுப்பு மற்றும் அதற்கானப் போராட்டங்களின் வரலாறு என்பது தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் தீண்டாமைக்கும் சாதி பாகுபாட்டிற்கும் எதிராக நடைபெற்ற மிக முக்கியமான சமூக நீதி போராட்டமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பொருளாதார ரீதியாக முன்னேறிய நாடார் சமூகத்தினருக்கு பல தென்னகக் கோயில்களில் நுழைவு மறுக்கப்பட்டது. இதற்கு எதிராக 1895இல் கழுகுமலை கலவரம் மற்றும் 1897 இல் கமுதி கோயில் நுழைவுப் போராட்டம் போன்றவை வெடித்தன. அந்த வகையில் திருவிதாங்கூர்

சமஸ்தானத்தின் கீழ் இருந்த குமரி மாவட்டத்தின் குமாரகோவிலில் உள்ள முருகன் கோயிலுக்குள் நாடார் சாதியினர் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனை பிச்சிப் பூ நாவலில் ஆசிரியர் , “ ஆளூர் பக்கம் இசங்கன் விளை என்னும் ஊர்ல ஆண்டிச்சாமி என்னு ஒரு சாமியார் இருக்காரு. பேர் கேட்ட முருக பக்தர். ஆண்டுதோறும் திருச்செந்தூருக்கு நாற்பத்தியோரு நாள் விரதம் இருந்து காவடி கட்டிப் போவாரு. முருகா என்று சொல்லி தன் திண்ணையில் குந்துர அவர்களுக்குத் தவறாமல் கருப்பட்டியும் தண்ணியும் கொடுத்து உபசரிப்பார். ஒரு நாள் ராத்திரி ஆண்டிச்சாமி ஒரு சொப்பனம் கண்டார். சொப்பனத்தில் வள்ளி தெய்வானை சகிதம் முருகன் அவருக்குக் காட்சி அளித்தார். உன் பக்தியை மெச்சினேன். நீ முறைப்படி விரதம் இருந்து குமாரகோயில் என் சன்னதிக்கு வா என்று சொல்லிவிட்டு மறைஞ்சிட்டார். ஒரு நாள் அல்ல பல நாளும் இதே சொப்பனம் திரும்பத் திரும்ப கண்டார். ஆண்டிச்சாமி தனக்கு வேண்டப்பட்ட பெரிய ஆளுகளை எல்லாம் சந்திச்சு தன் சொப்பனத்தைச் சொன்னாரு ஆண்டிச்சாமி வட்டாரத்து பெரிய ஆளுக அஞ்சு ஆறு பேரு குமார கோயில் அதிகாரி மார்ட்ட போனாக. ஐயா, ஆண்டிச்சாமி நாற்பத்தியோறு நாள் விரதம் இருந்து குமார கோயில் முருகர தரிசிக்க வாராரு. சொப்பனத்தில் சாமி சொல்லித்தான் வராரு .அதனால அதிகாரிமாறு அனுமதி தரணும் என்று தலைமை அதிகாரிக்கிட்ட கேட்டாக, அதிகாரி தன் சக அதிகாரிமாற கூட்டி ஆலோசித்தார். ஆண்டிச்சாமி விரதம் இருந்து எலும்பும் தோலுமாதான் வருவான். கோயிலுக்குள்ள போகும் முன்னே பூக்குளியிலே இறங்கி தானா ஆகணும். பூக்குழி அவன் தாண்டும் போதே அவனை நெருப்புல தள்ளிட்டா நாம அனுமதி கொடுத்தது மாதிரி ஆச்சி முருகனோட ஆண்டிச்சாமி ஐக்கியமானது மாதிரி ஆச்சு என்று மனசுக்குள்ள நினைச்சுக்கிட்டு கோயிலுக்கு வர அனுமதி கொடுத்தார்கள். ஆண்டிச் சாமியும் அவனுடன் வந்த நாடார் சமூகத்தினரும் உயர் சாதிக்காரர்களுடைய சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு பல்வேறு பாதுகாப்பு முன்னேற்பாட்டுடன் கோயிலுக்குள் நுழைந்தனர். கோவிலுக்குள் ஆண்டி நுழையிறப்போ அதிகாரிமாறு கோயில் தீட்டா போச்சுதே புடியுங்கடா ஆண்டிய அடிச்சு கொல்லுங்கடா நெருப்புல போட்டு பொசுக்குங்கடா என்று கத்தினர்.அவர்கள் கையில் சிக்காமல் ஆண்டிச்சாமி தன் பாதுகாப்பு வளையத்துக்குள் நின்று கோயிலுக்கு உள்ள சரட்டுன்னு நொழஞ்சி முருகன் முன்னால நின்னாரு “ எனப் பதிவு செய்துள்ளார் (2019:73 ,74). சட்டப்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு அனைவருக்கும் கோயில் நுழைவு உரிமை வழங்கப்பட்டு இருந்தாலும் இன்றும் தமிழகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இத்தகைய அவலங்கள் அரங்கேறி வருவதைக் காண முடிகிறது .

## முடிவுரை

உலக வாழ்வில் தன்னுடைய இன்பங்களை யாரும் பறித்து விடக்கூடாது என்றும் அவ்வின்பங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றும் நிகழ்த்தப்படுவதே ஒடுக்குமுறை ஆகும். ஒடுக்கும் மக்களும் ஒடுக்கப்படும் மக்களும் எழுத்தறிவற்றவராய் கூட இருப்பர். ஆனால் பார்ப்பனியப் பண்பாடு இந்த சொத்துடைமை சார்ந்த ஒடுக்குமுறையை நியாயப்படுத்துவதற்காக அதைப் பண்பாட்டு ஒடுக்கு முறையாகக் கற்பித்து அதை நியாயப்படுத்தவும் செய்தது. தமிழிலே சாதிய ஒடுக்குமுறைக்கானச் சிந்தனைகளையும் வழக்கங்களையும் பார்ப்பனிய மேலாண்மையை ஏற்றுக் கொண்ட பிறகு தான் தொடங்கியுள்ளனர். பார்ப்பனிய

மேலாண்மைக்குப் பிறகு சமூகத்தில் மேட்டிமையோர் அடித்தள மக்கள் என்ற இரு பிரிவுகள் நிலவி, அதில் மேலாண்மை செலுத்துவோராக மேட்டிமைக்குழு விழங்கினாலும் அது எல்லா நிலைகளிலும் தன்னை நேரடியாக வெளிக்காட்டிக் கொண்டு தன் மேலாண்மையை நிலை நாட்டுவதில்லை. பண்பாட்டு ஒடுக்குமுறை வாயிலாகத் தங்கள் மேலாண்மையை நிலைநாட்டுகின்றனர் என்பதை கட்டுரையின் தரவுகள் மூலம் அறிய முடிந்தது. பண்பாட்டு ஒடுக்கு முறையானது நமது சமூகத்தில் புழங்கு பொருட்கள் ( செருப்பு அணிய மறுப்பு,கல்வி ,வேலை, உணவு, உடை, குடியிருப்பு, பொதுக்கிணறு, பொதுக்குளம் என பல்வேறு நிலைகளில் வெளிப்பட்டதை இக்கட்டுரையும் மேலும் ஒரு முறை உறுதி செய்கிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. * ஒரு இனத்தின் பண்பாட்டை எழுதுவது என்பதே இன வரைவிலாகும்.
2. ** தன் இனமே உயர்ந்தது தங்கள் இனம் கடைபிடிக்கும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களே ஒட்டுமொத்த தமிழக சாதிகளுக்கானப் பண்பாடு என்ற சிந்தனையை உருவாக்குவது.
3. *** பராமரிப்பு இன்றி அழியும் நிலையில் இருக்கும் சிதைந்த கட்டிடம்.
4. **** நாடார் சாதியினரை இழிவாக அடையாளப்படுத்தும் சொல் சாணாராகும். குறிப்பாகக் குமரி மாவட்டத்தில் பனையேறும் தொழிலை மேற்கொள்ளும் நாடார் சாதியினரை குறிக்க ஆதிக்கச் சாதியினரால் பயன்படுத்தப்படும் இழிசொல்.

## துணைநூற் பட்டியல் (References)

1. சிவசுப்ரமணியன்., 2002: அடித்தள மக்கள் வரலாறு,
2. மக்கள் வெளியீடு, சென்னை-002.
3. மேலது., 2014: இனவரைவியலும் தமிழ் நாவலும்,
4. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
5. சென்னை- 098.
6. பக்தவத்சல பாரதி., 2014: இலக்கிய மானிடவியல்,
7. அடையாளம் பதிப்பகம்,
8. கருப்பூர் சாலை, புத்தாநத்தம்,
9. திருச்சி - 621310.
10. பொன்னீலன்.,2019: பிச்சிப் பூ (நாவல்)
11. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
12. சென்னை- 098.

© 2026 முனைவர் .ஜென்ஸிஸ் குமார் மி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..